**(Under Section.173 BNSS)**

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102169

1. District : Coimbatore PS: VAC Year: 2024 FIR No.: 11/2024/AC/CB Date: 24.10.2024
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The prevention of corruption Act 1988 as amended by the prevention of corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a), 7(c) r/w 12
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 23.10.2024 Date to : 23.10.2024
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 16.00 hrs நாள் வரை 23.00 hrs
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 24.10.2024 Time : 12.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 24.10.2024 Time : 13.15 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Typed written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் RTO check post KG Chavadi road going Coimbatore about 25 km south west direction
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. S. Jagadeesan (b) Father's/ ~~Husband's Name~~ Subba Reddy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 56 (d) Nationality Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Deputy Inspection cell officer (g) Address : District Collectors office Coimbatore
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) Tr. S. Burhanuddin motor vehicle Inspector (Non technical) (2) Tr. R. Eswaran, Assistant (3) Tr. N. Thangaraj office Assistant, K.G. Chavadi check post Coimbatore (4) Tr. Harish Kumar age (27) (private person) s/o Kumar D.No. 26 Sabari nagar, Putrukan koil K. Chettipalayam Tiruppur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

(Under Section.173 BNSS)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M.T.Ezhilarasi Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V.L.AC. Coimbatore on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 24/10/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.10.2024

Name: பெயர் H.Vijayalakshmi
Rank: நிலை Inspector No. எண் ..........
VLAC, Coimbatore.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

Contents of FIR in Cr.No.11/2024/AC/CB u/s 7 (a), 7 (a) r/w 12 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018.

இன்று 24.10.2024-ம் தேதி மதியம் 12.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் எம்.விஜயலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.S.ஜெகதீசன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.11/2024/AC/CB u/s 7 (a), 7 (a) r/w 12 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ஆக 13.15 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.S.ஜெகதீசன், துணை ஆய்வுக்குழு அலுவலர்,மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,கோயம்புத்தூர் மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,கோயம்புத்தூர். ந.க.எண்.208/2024/ஐ1, நாள். 24.10.2024 அம்மா, பொருள்: திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம்- கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிச்செல்கை) - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - முறைகேடுகள் குறித்து மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் சம்பந்தமாக கோவை மாவட்டம், கந்தேகவுண்டன் சாவடி போக்குவரத்துத்துறை, (வெளிச்செல்கை) சோதனை சாவடியில் பணிபுரியும் அலுவலர்கள், சோதனை சாவடியை கடந்து செல்லக்கூடிய வாகனங்களின் ஓட்டுநர்களிடமிருந்தும், கிளீனர்களிடமிருந்தும் வாகன வரி வசூல் செய்வதற்காகவும், E-Way Bill மற்றும் Trip Sheet, ஆகியவற்றை சரிபார்த்து அவைகளில் சோதனைச் சாவடி சீல் வைக்க, கையூட்டாக பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் கோவை மாவட்டம் கந்தேகவுண்டன் சாவடி போக்குவரத்துதுறை சோதனை சாவடி (வெளிச்செல்கை) அலுவலகத்தினை 23.10.2024 ம் தேதி மாலை சுமார் 16.00 மணியளவில் கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.M.விஜயலட்சுமி மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. திடீர் தணிக்கையில் கீழ்கண்ட விபரம் தெரியவந்தது. மேற்படி

போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிச்செல்கை) அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில்நுட்பமல்லாத) திரு. S.புர்ஹாநுதின் என்பவரும் உதவியாளராக திரு.R.ஈஸ்வரன் என்பவரும் அலுவலக உதவியாளராக திரு.N.தங்கராஜ் என்பவரும் 23.10.2024-ம் தேதி காலை 0800 மணிமுதல் பணியில் இருந்தார்கள். மேற்படி சோதனைச்சாவடியை சுமார் 15.30 மணிமுதல் கண்காணித்துக்கொண்டிருந்த போது சோதனைச்சாவடிக்கு முன்பாக கோவை-பாலக்காடு சாலையில், எதிர் எதிர் திசையில் செல்லும் சாலைகளின் இடையில் இரண்டு நபர்கள் நின்றுகொண்டு சோதனைசாவடியை கடந்து கேரளா நோக்கி செல்லும் வாகனங்களை தடுத்து நிறுத்தி E-Way bill மற்றும் Trip Sheet-ல் சீல் வைக்க செல்லும் வாகன ஓட்டுனர்கள் கிளீனர்களிடம் மாமூலாக கொடுக்கும் பணத்தை எடுத்துச் செல்லுமாறு அறிவுறுத்திக்கொண்டிருந்தார்கள், வாகன ஓட்டுனர்கள், கிளீனர்கள் சோதனை சாவடியில் மாமூல் பணத்தை கொடுத்து பில் மற்றும் ட்டிரிப் ஷீட்டில் சோதனை சாவடியின் சீல் வைத்து வந்த பின்னர்தான் அவர்களது வாகனத்தை தொடர்ந்து இயக்க அனுமதித்தார்கள். திடீர் தணிக்கை குழுவினர் மாலை சுமார் 16.00 மணிக்கு மேற்படி அலுவலகத்திற்கு வந்தபோது பிரதான ஹாலில் உள்ள E-way bill மற்றும் Trip sheet உள்ளிட்ட ஆவணங்களில் சோதனைச்சாவடி சீல் வைக்கும் கவுன்ட்டருக்கு எதிரில் சீருடையில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பர்ஹானுதின், மற்றும் அலுவலக உதவியாளர் திரு.தங்கராஜ் அமர்ந்திருந்தார்கள். அவர்களிடம் திடீர் தணிக்கைக்கு வந்த விபரத்தை தெரிவித்து திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. சோதனைச்சாவடிக்கு வெளியே வாகனங்களை நிறுத்திக்கொண்டிருந்த திரு.ஹரிஷ்குமார் மற்றும் திரு.விஜயன் ஆகியோர்களை அலுவலகத்திற்குள் அழைத்துவரப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.புர்ஹாநுதின் அவர்கள் அமர்ந்திருந்த இருக்கைக்கு முன்பிருந்த மர மேஜையின் வலதுபக்க டிராவை திறந்து பார்க்க அதில் மொத்தம் ரூ.46,100/- இருந்தது. மேற்படி பணத்தை பற்றி திரு.புர்ஹாநுதின், மோட்டார் வாகன ஆய்வாளர், உதவியாளர் திரு.ஈஸ்வரன், மற்றும் அலுவலக உதவியாளர் திரு.தங்கராஜ் ஆகியோர்களிடம் கேட்க அவர்கள் சோதனை சாவடிக்கு சீல் வைக்க வரும் வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் ஆவணங்களில் சீல் வைப்பதற்காக மாமூலாக கொடுத்த பணம் என்று சொன்னார்கள். எனவே மேற்படி பணம் ரூ.46,100/- விசாரணைக்காக

கைப்பற்றப்பட்டது. மேலும் மேஜை மேல் இருந்த அட்டை பெட்டியில் பணம் ரூ.4900/- இருந்தது. மேற்படி பணம் பற்றி மேற்படி நபர்களிடம் விசாரிக்க, வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்கள் ஆவணங்களில் சீல் வைப்பதற்காக மாமூலாக கொடுத்த பணம் என்று சொன்னார்கள். எனவே மேற்படி பணம் ரூ.4900/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.புர்ஹானுதின், மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் உதவியாளர் திரு.ஈஸ்வரன் அவர்களை வேறு எதாவது பணம் உள்ளதா என்பதை பற்றி விசாரித்த போது, மேற்படி சோதனை சாவடியில் வாகனங்களை நிறுத்துவதற்காக நியமிக்கப்பட்ட தனிநபர் திரு.ஹரிஷ்குமார் என்பவரிடம் காலையில் வசூல் செய்யப்பட்ட பணம் ரூ.50,000/-ஐ கொடுத்து வைத்திருப்பதாக தெரிவித்தார்கள். அலுவலகத்தில் அமர வைக்கப்பட்டிருந்த திரு.ஹரிஷ்குமார் த/பெ.குமார் என்பவரை விசாரிக்க, அவர் கடந்த 6 மாதமாக மேற்படி சேதனைச்சாவடியில் வாகனங்களை நிறுத்துவது, அலுவலர்களுக்கு சாப்பாடு வாங்கிக்கொடுப்பது போன்ற பணிகளை செய்துவருவதாகவும், அதற்காக மோட்டார் வாகன ஆய்வாளர் தினமும் ரூ.500/- முதல் ரூ.1,000/- வரை சம்பளமாக கொடுப்பதாகவும் தெரிவித்தார். 23.10.2024-ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.புர்ஹானுதின் அவர்கள் வாகன ஓட்டுனர்களிடம் இருந்து வசூல் செய்த மாமூல் பணம் ரூ.50,000/-ம் சேர்ந்தவுடன் அதை ஒரு காக்கி நிற கவரில் போட்டு அவரிடம் கொடுத்ததாகவும், மேற்படி பணத்தை அவர் பயன்படுத்திவரும், KL25 K 372 என்ற Royal Enfiled Classic 350 வாகனத்தின் AIR Filter அறையில் பணம் ரூ.50,000/-ஐ வைத்ததாக தெரிவித்து அவர் தானாக முன்வந்து சோதனைச்சாவடிக்கு அருகில் இருந்த அவரது இரு சக்கர வாகனத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். அந்த காக்கி நிற கவரை திறந்து பார்க்க அதில் மொத்தம் ரூ.50,000/- இருந்தது. மேற்படி பணம் ரூ.50,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திரு.ஹரீஷ்குமாருடன் வாகனங்களை நிறுத்திக்கொண்டிருந்த மற்றொரு நபரான விஜயன் த/பெ.மருதன் என்பவரை விசாரிக்க கடந்த 3 வருடமாக சோதனைச்சாவடியில் சீல் வைக்கவரும் வாகனங்களை நிறுத்துவது மற்றும் அலுவலர்கள் சொல்லும் பணிகளை செய்துவருவதாகவும், அவருக்கு மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் தினமும் ரூ.500/- முதல் ரூ.1000/- வரை சம்பளமாக கொடுப்பதாக தெரிவித்தார். கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,01,000/- பற்றி திரு.பர்ஹானுதின், மோட்டார் வாகன

ஆய்வாளர், திரு.ஈஸ்வரன், உதவியாளர் மற்றும் திரு.தங்கராஜ் அலுவலக உதவியாளர் ஆகியோர்களை நான் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர்கள் வாகன ஓட்டுனர்கள் மற்றும் கிளீனர்களிடம் இருந்து பணிநாளில் மாமூலாக பெற்ற பணத்தில், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.புர்ஹாநுதின் தனக்கு 50%-ம், உதவியாளர் திரு.ஈஸ்வரன் அவர்களுக்கு 25%-ம், அலுவலக உதவியாளர் திரு.தங்கராஜ் அவர்களுக்கு 25%-ம் என்று பிரித்துகொள்வோம் மூவரும் ஒப்புக்கொண்டார்கள். மேலும் திடீர் தணிக்கைக்கு வந்த சமயத்தில் மேற்படி சோதனைச்சாவடிக்கு சீல் வைக்க வந்த வாகன ஓட்டுனர்கள் 1) திரு.சாமிநாதன், த/பெ.சின்னான், 3/18, சொக்கனூர், அவிநாசி, திருப்பூர் மாவட்டம், 2) திரு.பெருமாள், த/பெ.குப்பன், கதவு எண்.254, மேட்டுப்புதூர், விஜயமங்களம் அஞ்சல், பெருந்துறை தாலுக்கா, ஈரோடு, 3) திரு.ஐயப்பன், த/பெ.நல்லப்ப ரெட்டியார், கதவு எண்.72/2 ரெட்டையாம்பட்டி, வளையாப்பட்டி அஞ்சல், நாமக்கல், 4.முப்பிடாதி, த/பெ.பெருமாள், கதவு எண்.6B/13, காந்திமதி தெரு, பழையபேட்டை, திருநெல்வேலி, 5.திரு.ஆனந்தன் த/பெ.குணசேகரன், கதவு எண்.12/126, காட்டூர் புதூர், மணப்பள்ளி அஞ்சல், பரமத்திவேலூர் தாலுக்கா நாமக்கல் மாவட்டம் ஆகியோரை விசாரிக்க, தங்களது வாகனங்களை சோதனை சாவடிக்கு சீல் வைக்க சென்ற போது அங்கிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் அலுவலர்கள் தங்களிடம் மாமூலாக பணம் கேட்பதாகவும், பணம் கொடுத்தால் தான் சீல் வைப்பார்கள் என்று தெரிவித்தார்கள். அவர்கள் ஒவ்வொரு முறையும் மேற்படி சோதனைசாவடியை கடந்து செல்லும் போதும் சோதனை சாவடியில் உள்ள போக்குவரத்து அலுவலர்கள் வாகனத்தை நிறுத்தி சீல் வைக்க பணம் கேட்டு பெறுவது வழக்கம் என்றும், அதன் படி 23.10.2024-ம் தேதி பணம் கொடுத்து சீல் வைக்க வந்ததாக தெரிவித்தார்கள். மேற்படி 5 நபர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர்களிடமிருந்து வாகனம் சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனைசாவடிக்கு எதிரில் வாகனங்களை நிறுத்திக் கொண்டிருந்த தனிநபர்களான திரு.ஹரிஷ்குமார் மற்றும் திரு.விஜயன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் அலுவலகத்தின் கணினி அறையில் இருந்த திரு.மணிமாறன் என்ற சரவணன் என்பவரை விசாரிக்க அவர் கடந்த 2016-ம் ஆண்டு முதல்

மேற்படி சோதனை சாவடியில் பணிபுரிந்து வருவதாகவும், அவர் உதவியாளர் திரு.ஈஸ்வரனுக்கு உதவியாக கணினியில் பணிகள் செய்துவருவதாகவும், அலுவலகத்தில் சொல்லும் வேலைகளை செய்துவருவதாகவும் தெரிவித்தார். திடீர் தணிக்கையின் போது ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கை குறித்து ஒரு நடவடிக்கை தயார் செய்யப்பட்டு அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் சோதனையில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,01,000/- மற்றும் ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்கள் இணைத்துள்ளேன். இப்புகார் குறித்து முறைகேடுகள் சம்பந்தமாக விசாரணை செய்து சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (Sdxxxx) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கோயமுத்தூர். Madam, received the complaint on 24.10.2024 at 12.30 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.11/2024/AC/CB u/s 7 (a), 7 (a) r/w 12 of Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 13.15 hrs against Tr.S.Burhanuddin., Motor Vehicle Inspector, (Non-Technical)-kG Chavadi Checkpost (Outgoing), Tr.R.Eswaran, Assistant, KG Chavadi Checkpost (Outgoing), Tr.N.Thangaraj, Office Assistant, KG Chavadi Checkpost (Outgoing), and Tr.K.Harishkumar, S/o.Kumar, Private Person (Sdxxxxxx) M.Vijayalakshmi, Inspector of Police, V&AC, Coimbatore. இதன் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயமுத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது.

(எம்.விஜயலட்சுமி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.